முக்கிய வார்த்தைகள்:
*பிள்ளைகள்*
*திட்டமிடுதல்*
*வாழ்வாதாரம் / உணவு வழங்குதல்*
*சார்ந்திருப்பது*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**

**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**

**25 செப்டம்பர் 2026 / 13 ரபீவுல் ஆகிர் ஹிஜிரி 1448**

# சகிப்புத்தன்மை மிக்க குடும்பங்களை உருவாக்குதல் : தொலைநோக்குப் பார்வையையும் நம்பிக்கையையும் சமநிலைப்படுத்துதல்

إِنَّ الْحَمْدَ لِلَّهِ، نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ وَنَسْتَغْفِرُهُ، وَنَعُوذُ بِاللهِ مِنْ شُرُورِ أَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ أَعْمَالِنَا، مَنْ يَهْدِهِ اللهُ فَلاَ مُضِلَّ لَهُ، وَمَنْ يُضْلِلْ فَلاَ هَادِيَ لَهُ، وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِيْنَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. قَالَ تَعَالَى فِي التَّنْزِيل: يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ ٱتَّقُواْ ٱللَّهَ حَقَّ تُقَاتِهِۦ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]** அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்கு அடிபணிந்து நடப்பதன் மூலமாகவும், அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீது தக்வா [பக்தியை] ஏற்படுத்திக் கொள்வோமாக! எல்லாம் வல்ல அல்லாஹ், இம்மையிலும் மறுமையிலும் நம்மையும் நமது அன்பிற்குரியவர்களையும் பாதுகாப்பானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**

இன்றைய "குத்பா" பிரசங்கத்தில், நமது **பிள்ளைகள்** மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கை, அவர்கள் சம்பந்தமாக நம்மீதுள்ள பொறுப்பு, வாழ்க்கையில் திட்டமிடுதலின் முக்கியத்துவம் மற்றும் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பது ஆகியவற்றைப் பற்றி விவாதிக்கப்படும். இன்ஷாஅல்லாஹ். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அத்-தூர்" எனும் அத்தியாயத்தின் 21-வது வசனத்தில் கூறுகின்றான்:

وَٱلَّذِينَ ءَامَنُوا۟ وَٱتَّبَعَتْهُمْ ذُرِّيَّتُهُم بِإِيمَٰنٍ أَلْحَقْنَا بِهِمْ ذُرِّيَّتَهُمْ
وَمَآ أَلَتْنَٰهُم مِّنْ عَمَلِهِم مِّن شَىْءٍ ۚ كُلُّ ٱمْرِئٍۭ بِمَا كَسَبَ رَهِينٌ

பொருள்: *"எவர்கள் ஈமான் கொண்டு, அவர்களுடைய சந்ததியாரும் ஈமானில் [ஓரிறை நம்பிக்கையில்] அவர்களைப் பின் தொடர்கிறார்களோ, அவர்களுடைய அந்த சந்ததியினரை அவர்களுடன் [சுவனத்தில் ஒன்று] சேர்த்து விடுவோம். [இதனால்] அவர்களுடைய செயல்களின் [நன்மைகளில்] எந்த ஒன்றையும், நாம் அவர்களுக்குக் குறைத்து விட மாட்டோம் - ஒவ்வொரு மனிதனும், தான் சம்பாதித்த செயல்களுக்குப் பொறுப்புடையவனாக இருக்கின்றான்"*

**அன்பிற்குரிய சகோதரர்களே**!

நாம் இயல்பாகவே ஒருவரையொருவர் சார்ந்திருக்கின்றோம்; குறிப்பாக, குடும்பத்திற்குள் பெற்றோருக்கும் **பிள்ளைகளுக்கும்** இடையிலான உறவானது, அமைதி, பாதுகாப்பு, நிம்மதி மற்றும் அன்பு ஆகிய உணர்வுகளை வளர்ப்பதாக இருக்க வேண்டும். மேலும், நாம் பெற்றோராகும் போது, அடுத்த தலைமுறை முஸ்லிம்களை வளர்க்கும் பொறுப்பை நாம் ஏற்கும் நிலையில் இருக்கின்றோம்.

இருப்பினும், இன்று நம்மில் பலர், வேலையின் அழுத்தங்கள் மற்றும் நவீன வாழ்க்கையின் சிக்கலான சவால்கள் உட்பட பல்வேறு சுமைகளை ஏற்கனவே சுமந்து வருகிறோம். இந்தக் கவலைகளும், எதிர்காலம் குறித்த

நிச்சயமற்ற தன்மையும் இணைந்து, சிலரை, குடும்பத்தைத் தொடங்குவதிலோ அல்லது **குழந்தைகளைப்** பெற்றுக் கொள்வதிலோ ஆர்வம் குன்றியவர்களாக ஆக்கி விடலாம்.

**குழந்தைகளைப்** பெற்றுக் கொள்வது பற்றிச் சிந்திக்கும் போது, அவர்களின் எதிர்காலம் தொடர்பான விஷயங்களை நாம் கவனமாகத் திட்டமிடுதல் வேண்டும். இதில் அவர்களின் உடல், உணர்வு மற்றும் ஆன்மீகத் தேவைகளையும், அத்துடன் அவர்களின் **பொருளாதாரத்** தேவைகளையும் கண்டறிந்து, பூர்த்தி செய்வதை உறுதி செய்வதும் அடங்கும். அதே சமயம், வாழ்வாதாரம் மற்றும் எதிர்காலம் குறித்த கவலைகள் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது நாம் **சார்ந்து** இருப்பதையும், **நம்பிக்கையையும்** பலவீனப்படுத்த நாம் அனுமதித்து விடக் கூடாது.

ஏனெனில், அல்லாஹ் வழங்கும் **வாழ்வாதாரம்** என்பது பல வடிவங்களில் நமக்குக் கிடைக்கின்றது; நம்மிடமுள்ள நிதி, பொருளாதாரம் நிலைத்து இருப்பது, அமைதியான இல்லம் மற்றும் ஒரு நல்ல **பிள்ளையின்** மனமார்ந்த பிரார்த்தனைகள் போன்ற பல வடிவங்களில் நமக்கு வழங்கப்படுகிறது. இவை அனைத்தும் வாழ்வாதாரம் மற்றும் அருட்கொடைகளின் வடிவங்களே என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். வாழ்வாதாரம் நமக்குக் கிடைக்கவில்லையே எனக் கவலை கொள்வது கூடாது.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே**!
வாழ்க்கையின் தேவைகளையும், நமது குடும்பங்களை மீள்திறன் மற்றும் சகிப்புத் தன்மையைக் கொண்டவையாக வளர்க்க வேண்டுமென்ற நமது விருப்பத்தையும் சமநிலைப்படுத்த நாம் முயலும் போது, மார்க்கத்தின் பின்வரும் கொள்கைகளை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்:

**முதலாவதாக: எதிர்காலத்திற்காகத் திட்டமிடுவதானது, பொறுப்புணர்வைப் பிரதிபலிக்கும் ஒரு விஷயமாகும்**

உண்மையில், ரசூலுல்லாஹ்[ஸல்] அவர்கள் தனது உம்மத்தின் [சமுதாய மக்களின்] எண்ணிக்கையைக் குறித்து, எவ்வாறு பெருமிதம் கொள்பவர்களாக இருந்தார்கள் என்பதை அறிவிக்கும் பல ஹதீதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், ஒரு குடும்பத்தை உருவாக்கும் போது, நம்மால் அவர்களுக்கு வழங்க முடிகின்ற கவனிப்பின் தரத்தையும், நமது **பிள்ளைகள்** மற்றும் வாழ்க்கைத் துணையின் தேவைகளை - பொருளாதார ரீதியாகவோ, உணர்வு ரீதியாகவோ அல்லது வாழ்க்கையின் பிற அம்சங்களிலோ - பூர்த்தி செய்யும் நமது திறனையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

இஸ்லாத்தில், **பிள்ளைகளைப்** பெற்று, வமிசத்தைத் தொடர ஊக்குவிப்பதென்பது, நமது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கும், குடும்ப உறுப்பினர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்வதற்குமான கட்டளையுடன் இணைந்தே வருகிறது. இந்தப் பொறுப்புகள் நிறைவேற்றப்படும் போது மட்டுமே, நம்மால் சகிப்புத் தன்மையும் மீள்திறனையும் கொண்ட தனிநபர்களையும் குடும்பங்களையும் உருவாக்க முடியும்.

**இரண்டாவதாக: திட்டமிடல் மற்றும் தயாரிப்புடன் சேர்த்து, அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கைக் கொள்வது**

நமது குடும்பத்தின் எதிர்காலத்திற்காக, நாம் திட்டமிட்டுத் தயாராகும் போது, அல்லாஹ்வின் மீதான நமது **நம்பிக்கையை** ஆழப்படுத்த வேண்டும்; காரணம், நமது எதிர்காலம் நமது முயற்சிகளால் மட்டுமே உறுதி செய்யப்படுவதில்லை; மாறாக, அல்லாஹ் ஒருவனே, தான் விதித்துள்ள வழிகளில் **வாழ்வாதாரத்தையும்** அருட்கொடைகளையும் நமக்கு வழங்குகிறான். இதனை நாம் நினைவில் கொள்வது அவசியமாகும்.

**அன்பிற்குரிய சகோதரர்களே!**

ஒவ்வொரு மனிதனின் **வாழ்வாதாரமும்** அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவினால் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று, ஈமான் எனும் நமது ஓரிறை நம்பிக்கை நமக்குப் போதிக்கிறது. தான் நாடியவர்களுக்கு

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா **குழந்தைப் பாக்கியங்களை** வழங்குகிறான். எனவே, பொறுப்புள்ள நபர்களாக, நம்மால் முடிந்த அளவு எதிர்காலத்திற்குத் தயாராகுவது நமது கடமையாகும். அதற்கும் மேலாக, அவனது ஞானத்திலும் நன்மையிலும் முழு நம்பிக்கைக் கொண்டு, நமது காரியங்களை அல்லாஹ்விடம் **ஒப்படைக்க** வேண்டும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமது ஓரிறை நம்பிக்கையைத் தொடர்ந்து பலப்படுத்தி, நமது **வாழ்வாதாரத்தில்** அபிவிருத்தியையும் வளத்தையும் ஏற்படுத்தி, நமது குடும்பங்கள் மீது தனது கருணை மழையைப் பொழியட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا اْلمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ

عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.